DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.136/2022**
Preliminary Register
Sessions
Deposition of witness for Prosecution அ.சா.6
Defence
Court

Name : சிவதாணு
Father/ Husband Name : ராமநாதன்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of **02.09.2023**

**<u>முதல்விசாரணை:-</u>** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது தேவகோட்டை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 16.03.2020ம் தேதி காலை 9.00 மணியளவில் பணியில் இருந்த போது சுமார் 50 வயது மதிக்கத்தக்க அ.சா.4 சின்னதம்பி என்பவர் அவரது மகளால் அழைத்து வரப்பட்டார். அவர் தன்னை இனம் தெரிந்த 3 நபர்கள் (ஒரு ஆண் மற்றும் 2 பெண் நபர்கள்) தாக்கியதான சொன்னார். அன்றைய தினமே காலை 7.00 மணியளவில் அவரது வீட்டில் வைத்து கட்டையால் தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்தததில் அவரது வலது பக்க உச்சி மண்டையில் சிதைந்த காயம் 4x1x0.5 செ.மீட்டர் அளவுடன் இருந்தது. வலது பக்க தோள்பட்டை எலும்பில் இரத்தக்கட்டும் இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரது வலது பக்க தோள்பட்டையில் நுண்கதிர்படம் எடுக்கப்பட்டது. எந்த எலும்பு முறிவும் தென்படவில்லை. அவர் 21.03.2020ம் தேதி

சிகிச்சையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கினேன். ( **அ.சா.4ன் விபத்து பதிவேடு மற்றும் அதன் பின்புறம் காயத்தின் தன்மை குறித்த கருத்துரை அடங்கிய சான்று அ.சா.ஆ.2)**

2. அன்றைய தினமே என்னிடம் சிகிச்சைக்கு அதே சம்பவத்தில் 35 வயது மதிக்கத்தக்க அ.சா.1 மஞ்சுளா என்பவர் அவரது கணவரால் அழைத்து வரப்பட்டார். அவர் தன்னை கட்டை மற்றும் அருவாளால் எதிரிகள் தாக்கியதாக சொன்னார். அவரை பரிசோதனை செய்தததில் அவரது இடது பக்க மேற்கையில் இரத்தக்கட்டு 1. 15x3 செ.மீ 2. 6x3 செ.மீ அளவிலும் இரத்தக்கட்டுகள் இருந்தது. வலது கையில் சிராய்ப்பு காயம் 0.5ஒ0.5 செ.மீட்டர் அளவிலும் இருந்தது. வலது கீழ்கையில் சிராய்ப்பு காயம் 2ஒ1 செ.மீட்டர் அளவில்இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு நுண்கதிர் படம் இடது கையில் எடுக்கப்பட்டது. எந்த எலும்பு முறிவும் இல்லை என கண்டறியப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கினேன். அவர் 21.03.2020ம் தேதி அன்று சிகிச்சையில் இருந்து விடுவிக்கபட்டார். ( **அ.சா.1ன் விபத்து பதிவேடு மற்றும் அதன் பின்புறம் காயத்தின் தன்மை குறித்த கருத்துரை அடங்கிய சான்று அ.சா.ஆ.3)**

**3.** அன்றைய தினமே என்னிடம் சிகிச்சைக்கு அதே சம்பவத்தில் 3வது நபராக 16 வயது மதிக்கத்தக்க அ.சா.3 அகல்யா என்பவர் அவரது தாயாரால் அழைத்து வரபட்டார். உச்சந்தலையில் இரத்தக்கட்டு இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. 18.03.2020ம் தேதி தலைமறைவு ஆகிவிட்டார். அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து சான்று எதுவும் வழங்க முடியவில்லை என குறிப்பிட்டுள்ளேன். **(அ.சா.3ன் விபத்து பதிவேடு அ.சா.ஆ.4).**

**4.** அன்றைய தினமே என்னிடம் சிகிச்சைக்கு அதே சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 4வது நபராக 19வயது மதிக்கத்தக்க அ.சா.2 அபிநயா என்பவர் அவரது தாயாரால் அழைத்து வரப்பட்டார். அவரை பரிசோதனை செய்ததில் அவரது இடது பக்க மேற்கையில் இரத்தக்கட்டு இருந்தது. அவர் வெளிநோயாளியாக அனுமதித்து சிகிச்சை பெற்றார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என்று சான்று வழங்கினேன். **(அ.சா.2ன் விபத்து பதிவேடு**

**மற்றும் அதன் பின்புறம் காயத்தின் தன்மை குறித்த கருத்துரை அடங்கிய சான்று அ.சா.ஆ.5)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. விபத்து பதிவேட்டுக்கென தனியாக படிவங்கள் மருத்துவ விதியின் படி உள்ளது என்றும் அதில் வரிசை எண் கொடுக்கப்பட்டிருக்கும் என்றால்சரிதான். இந்த வழக்கில் விபத்து பதிவேடு எதுவும் நான் கொடுக்கவில்லை என்றால் அச்சிடப்பட்ட படிவத்தில் நான் வழங்கவில்லை. அதற்கு பதிலாக பதிவு எண் கொடுக்கப்பட்டு கையால் எழுதப்பட்டு விபத்து பதிவேட்டிற்கான சான்று வழங்கினேன். பொதுவாக விபத்து பதிவேட்டில் யார் காயம் பட்ட நபரை அழைத்து வந்தது விவரங்கள் அச்சிடப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் அ.சா.4 சின்னதம்பி என்பவரை அ.சா.1 மஞ்சுளா என்பவர் அழைத்து வந்ததாக நான் வழங்கிய சான்றில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. அ.சா.4 தன்னை 3 நபாகள் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் வழங்கிய அ.சா.ஆ.2ஆன விபத்து பதிவேட்டில் சின்னதம்பி வீட்டில் வைத்து சம்பவம் நடந்ததாக என்னிடம் சொன்னதை பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த நேரம் காலை 7.00 மணி என அ.சா.ஆ.2ல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.4க்கு ஏற்பட்ட காயங்கள் இருசக்கர வாகனத்தில் வேகமாக செல்லும் போது கல்லின் மேல் விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. நான் அ.சா.4க்கு எடுத்த நுண்கதிர் படத்தை காவல்ஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் விசாரணை செய்த போது நுண்கதிர் படம் எடுத்த விவரம் பற்றி குறிப்பிட்டேன்.

3. அ.சா.1 மஞ்சுளாவை சிகிச்சைக்கு அழைத்து வந்தவர் அவரது கணவர் என விபத்து பதிவேட்டில் பதிவு செய்துள்ளேனா என்றால் சரிதான். அ.சா.1 அவரது வீட்டின் முன்பு சம்பவம் நடந்ததாக என்னிடம் குறிப்பிட்டார் என்று சொன்னால் சரிதான். அ.சா.1ற்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை பற்றிய விவரங்கள் அடித்து திருத்தம் செய்யப்பட்டு உள்ளது என்று சொன்னால் சரிதான். அ.சா.1க்கு ஏற்பட்ட காயஙகள் ஆடு மேய்க்க போகும் போது வேலி முள்கம்புகளில் தவறி விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா எனறால் வேகமாக சென்று தவறி வரிசையாக ஊன்றியிருக்கும் குச்சி அல்லது கம்பியில் விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது. அ.சா.1க்கு ஏற்பட்ட

இரத்தக்கட்டு ஓரிரு நாட்களுக்கு முன்பு ஏற்பட்டிருக்க வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு இல்லை.

4. அ.சா.3 அகல்யாவின் விபத்து பதிவேட்டில் காயம்பட்ட இடம் பற்றி என்னிடம் குறிப்பிட்டு சொல்லாததால் நான் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.3ஐ மருத்துவமனைக்கு அழைத்து வந்தது அ.சா.1 மஞ்சுளா என்றால் சரிதான்.

5. அ.சா.2 அபிநயாவின் விபத்து பதிவேட்டில் காயம்பட்ட இடம் பற்றி என்னிடம் குறிப்பிட்டு சொல்லாததால் நான் பதிவு செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.அ.சா.2ஐ மருத்துவமனைக்கு அழைத்து வந்தது அ.சா.1 மஞ்சுளா என்றால் சரிதான். அ.சா.3 மற்றும் 4ற்கு விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள இரத்தக்கட்டுகள் இருசக்கர வாகனத்தில்இருந்து தவறி விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. நான் சொல்வது போல் மருத்துவ சிகிச்சைக்கு அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பின்னிட்டு காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க விபத்து பதிவேட்டை கையால் எழுதி ஆவணமாக காவல்துறையினரிடம் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த கால கட்டத்தில் கையால் தான் விபத்து பதிவேடு எழுதி கொடுக்கப்பட்டுள்ளது. நான் விபத்து பதிவேடு வழங்கிய கால கட்டத்தில் அச்சிடப்பட்ட விபத்து பதிவேடு இருந்தது என்றும் நான் வழக்கிற்காக இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.